# செய்திக் குறிப்பு

1967 ஆம் ஆண்டில் சென்னை மாநிலம் ‘தமிழ்நாடு’ என்று பெயர் மாற்றம் பெற்றதைத் தொடர்ந்து இவ்வாண்டு 50ஆம் ஆண்டில் அடியெடுத்து வைப்பதை முன்னிட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான அறிவிப்பிற்கிணங்க, தமிழ்நாட்டின் பெருமையையும் தமிழர் பெருமையையும் அனைவரும் உணரும் வகையில் தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் கல்லூரி மாணவர்களுக்கு கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்தி மாவட்ட அளவிலும் மாநில அளவிலும் பரிசுகள் வழங்கப்படவுள்ளன.

கல்லூரி மாணவர் போட்டிகளுக்கான தலைப்புகள், மொழியின் பெருமையினை உலகிற்கு எடுத்துரைத்த பேரறிஞர் அண்ணா, பாரதியார், பாரதிதாசன், திரு.வி.கல்யாண சுந்தரனார், பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் ஆகியோரின் படைப்புகளை அடியொற்றி அமையும். மாவட்ட அளவில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு ஒவ்வொரு போட்டிக்கும் முதல் பரிசு ரூ.5,000/- இரண்டாம் பரிசு ரூ.3,000/-, மூன்றாம் பரிசு ரூ.2,000/- மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்படும்.

மாவட்ட அளவில் வெற்றி பெற்ற மாணவர்கள், மாநில அளவில் நடைபெறும் போட்டிகளில் பங்குபெற அனுமதிக்கப் பெறுவார்கள். மாநில அளவில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு முதல் பரிசு ரூ.50,000/- மற்றும் நான்கு கிராம் தங்கப் பதக்கம், இரண்டாம் பரிசு ரூ.25,000/- மற்றும் நான்கு கிராம் தங்கப்பதக்கம், மூன்றாம் பரிசு ரூ.10,000/- மற்றும் நான்கு கிராம் தங்கப்பதக்கம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சென்னையில் நடைபெறவுள்ள தமிழ்நாடு 50 ஆம் ஆண்டு பொன்விழாவில் வழங்கப்படும்.

பெரம்பலூர் மாவட்டத்தில் கல்லூரி மாணவர்களுக்குப் போட்டிகள் 25.06.2018 ஆம் நாளன்று பெரம்பலூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெறும் போட்டிகளில் கலந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் தாங்கள் பயிலும் கல்லூரி முதல்வரின் பரிந்துரைக் கடிதத்துடன் பெரம்பலூர் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநரிடம் போட்டி நாளன்று நேரில் அளித்து போட்டிகளில் கலந்து கொள்ளலாம்.

மாவட்ட ஆட்சியர்
பெரம்பலூர் மாவட்டம்